# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

## THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 56/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-14/PW- 13 | Village: | |
| Name | : துர்கா, காவல் ஆய்வாளர் | Age | : |
| Father's/Husband's Name | : | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of**

**18/12/2023**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி திராவிடச்செல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது திருத்துறைப்பூண்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 15/10/2019 ம் தேதி கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது, அன்றையதினம் மதியம் 01.00 மணியளவில் கும்பகோணம், திப்பிராஜபுரம் ராமச்சந்திரன் காலனியை சேர்ந்த பவுட்ன்ராஜ் மகள் சசிகலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 16/2019 ல் சட்டபிரிவுகள் 417, 493., 506(2) இதச படி வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு இவ்வழக்கினை விசாரணைக்கு

எடுத்து கொண்டு அன்றையதினம் தேதி மதியம் 02.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சிற்றரசு மற்றும் மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ( **அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.6 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் பட்டியல் சாட்சிகள் சசிகலா, பவுன்ட்ராஜ், ஜானகி, சத்யா, பாக்கியராஜ், ராஜீவ்காந்தி ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் எதிரிகளை தேடி வந்த நிலையில் 15/10/2019 ம் தேதி மதியம் 03.15 மணியளவில் திருநாகேஸ்வரம் ரோடு , மேம்பாலம் இறக்கம் அருகே நின்று கொண்டிருந்த 1ம் எதிரி ரகுபதி என்பவரை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்து, நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைத்து உரிய நடைமுறைக்குப்பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். எதிரி 2 மற்றும் 3 மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்ற முன்பிணையில் சென்றுள்ளதால் அவர்களை இவ்வழக்கில் கைது செய்யவில்லை. பின்னர் 17/10/2019 ம் தேதி பாதிக்கப்பட்ட பெண் சசிகலா என்பவரை முதல்நிலை பெண் காவலர் மகேஸ்வரி என்பவர் மூலமாக மருத்துவ பரிசோதனைக்கு உரிய வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்னர் 04/11/2019 ம் தேதி 1ம் எதிரியை இரண்டாம்நிலை காவலர் கிருஷ்ணன் என்பவர் மூலமாக மருத்துவ பரிசோதனைக்கு உரிய வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்பு 05/11/2019 ம் தேதி கும்பகோணம் அரசு மருத்துவமனை சென்று பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு மருத்துவ பரிசோதனை செய்து சான்றளித்த மருத்துவர் அஷ்டலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, பாதிக்கப்பட்ட பெண்ணிற்கான மருத்துவ சான்று பெற்று வந்தேன். பின்னர் அன்றையதினமே 1ம் எதிரிக்கு மருத்துவ பரிசோதனை செய்து சான்றளித்த மருத்துவர் அழகர்சாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று,1ம் எதிரிக்கான மருத்துவ சான்று பெற்று வந்தேன். பின்னர் வழக்கின் கோப்பினை பார்வையிட்டு 1 முதல் 3 எதிரிகள் சாட்சிகளை அசிங்கமாக திட்டியதாக தெரிய வந்ததால் வழக்கின்

சட்டபிரிவுகளை 417, 493, 506(2)இதசவிலிருந்து 417, 493, 294(பி), 506(2)இதசவாக பிரிவு மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன். **(மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ-8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )பின்னர் இத்துடன் விசாரணை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு 1 ம் எதிரி மீது சட்ட பிரிவுகள் 417, 294(பி), 493, 506(2) இதச வின் படியும், 2 மற்றும் 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 506(2)இதச வின் படியும் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் 15/10/2019 ம் தேதி புகார் கொடுக்கப்பட்டது. புகார் வாய்மொழியாக பெறப்பட்டதா என்றால் புகார் எழுதிக்கொடுக்கப்பட்டது. புகார்தாரர் அவராக புகார் எழுதினாரா என்றால் புகார்தாரர் புகாரை எழுதிக்கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார். புகார் மனுவினை புகார்தாரர் தான் எழுதினாரா என்றால் அது எனக்கு தெரியாது. புகார் அளிக்கப்பட்டபோது சசிகலா மட்டும் தான் வந்தாரா வேறு யாரும் வந்தார்களா என்றால் அவரது பெற்றோர்களும் உடன் வந்தார்கள்.

2. புகார் கொடுத்த பிறகு அது சம்மந்தமாக விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். எந்த தேதியில் வழக்கு பதிவு செய்தேன் என்றால் அன்றையதினமே வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் வீட்டிலிருந்து எங்கள் காவல் நிலையத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி என்னவென்றால் 10/06/2019 அன்றும், 10/10/2019 ம் தேதி தொடர்ச்சியாக சம்பவங்கள் நடைபெற்றுள்ளது. இவ்வழக்கு சம்மந்தமாக மருத்துவரை விசாரித்தேனா என்றால் 05/11/2019 ம் தேதி விசாரித்தேன்.

3. மருத்துவ அறிக்கையில் மருத்துவர் சசிகலா 6 மாத கால கர்ப்பமாக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் சட்டபிரிவு மாறுதல் அறிக்கை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த பிரிவின் கீழ் சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன் என்றால் ஏற்கனவே பதிவு செய்த பிரிவுகளுடன் இதச பிரிவு 294(பி)- யை மட்டும் சேர்த்துள்ளேன். பார்வை மகசரில் எத்தனை சாட்சிகளை விசாரித்தேன்

என்றால் 2 சாட்சிகளை விசாரித்தேன். நான் திப்பிராஜபுரம் சென்று இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு சாட்சிகள் யாரையும் விசாரணை செய்தேனா என்றால் விசாரித்தேன்.

4. நான் இதச பிரிவு 294(பி)-யை சேர்த்துள்ளது சம்மந்தமாக சாட்சிகள் யாரையும் விசாரித்துள்ளேனா என்றால் விசாரித்தேன். புகார்தாரர் சசிகலா மற்றும் 1ம் எதிரிக்கும் எத்தனை வருடங்களாக பழக்கம் என்பது குறித்து எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் சுமார் 1 வருட காலமாக பழக்கம் என தெரிய வந்தது. குற்ற இறுதியறிக்கை எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் 05/11/2019 ம் தேதி தாக்கல் செய்தேன். நான் சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 யிடமிருந்து புகார் மனு எதுவும் பெறப்படவில்லை என்றாலும், நான் சம்பவ இடம் சென்று சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து, எதிரிகள் மீது பொய்யாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிரியை நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம் (நா.சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**